பக்கங்கள் 23+8

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 28 வியாழக்கிழமை 11.07.2024 அதிர்வு 346

## தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்த பொலிஸ் சார்ஜன்ட்

அநுராதபுரத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 04▶



### தேர்தலைத் தள்ளிப் போட முயன்றால்

# ஜனாதிபதியையும் அரசையும் மக்கள் ஓட ஓட விரட்டியடிப்பர்!

### நாடாளுமன்றத்தில் இன்று சுமந்திரன் எச்சரிக்கை

"ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் நடத்தியாக வேண்டும். அதுதான் அரசமைப்பு ஏற்பாடு. ஏதேனும் வகையில் அதைக் குழப்பித் தேர்தலைப் பிற்போட முயற்சித்தால் ஜனாதிபதியையும் இந்த அரசையும் மக்கள் ஓட ஓட விரட்டியடிப்பர்கள்."

- இவ்வாறு இன்று நாடாளுமன்றத்தில் அரச தரப்பைப் பார்த்து எச்சரிக்கை விடுத்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தல் விடயம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் இன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் மீது உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 04▶



## பாரிந்த ரணசிங்கவை சட்டமா அதிபராக நியமிக்க அங்கீகாரம்

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட்டமா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்புப் பேரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சபாநாயகரின் தலைமையில் அரசமைப்புப் பேரவை இன்று கூடிய போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரசமைப்புப் பேரவையின் தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க, அண்மையில் பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஜூலை இறுதிக்குள் மெகா கூட்டணி

## சஜித்தின் கட்சி திட்டம்



ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னர் அறிவிக்கப்படவுள்ள நிலையில், ஜூலை இறுதிக்குள் மெகா கூட்டணியை மக்கள் மயப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது எனவும், கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, ஆளுந்தரப்பு மற்றும் இதர கட்சிகளில் இருந்து 10 இற்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிதாக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைவார்கள் எனவும் அறியமுடிகின்றது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியான பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக சஜித் பிரேமதாஸ நேரடி பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் எனவும் மேலும் அறியமுடிகின்றது.



# ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த சட்டத்தரணி கிரிஷ்மால் வர்ணசூரிய

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளரும், 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சட்டத்தரணி கிருஷ்மால் வர்ணசூரிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

சட்டத்தரணி கிரிஷ்மால் வர்ணசூரிய இலங்கை, ஹேக் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் 24 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவராவார்.

நாட்டின் 10 சிறந்த இளம் ஆளுமைகளில் ஒருவராகவும் அவர் பெயரிடப்பட்டிருந்தார்.

இந்நாட்டில் திறமையான சட்டத்தரணிகளில் ஒருவராக திகழ்ந்து வரும் அவர், சட்டத்துறையில் பரந்துபட்ட அறிவைக் கொண்டுள்ளதன் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்மதிப்பை பெற்ற ஒருவராகவும் திகழ்ந்து வருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினம்: நாடாளுமன்றத்தில் பிரேரணை முன்வைப்பு

## நாளை விவாதம் நடைபெறும்


மலையகத் தொழிற்சங்கத் தியாகிகளை நினைவுகூருவதற்குத் தினமொன்றைப் பிரகடனப்படுத்தக் கோரி நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரால் முன்வைக்கப்பட்டுள்ள குறித்த பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமை விவாதம் நடைபெறவுள்ளது.

ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமாகப் பிரகடனப்படுத்துமாறு வேலுகுமார் எம்.பி. கோரிக்கை முன்வைக்கவுள்ளார்.

மலையகத் தொழிற்சங்கத் தியாகிகளை நினைவுகூருவதற்கு அரச அங்கீகாரத்துடன் தினமொன்று அவசியம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தாலும் பல வருடங்களாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே வேலுகுமார் எம்.பியால் இது தனிநபர் பிரேரணையாக சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.



# நான்கு வயது சிறுமிக்கு மது பருக்கிய தாய்மாமன்

## சாமிமலைப் பகுதியில் கொடூர சம்பவம் சந்தேகநபருக்கு 17 வரை விளக்கமறியல்

**(மஸ்கெலியா நிருபர்)**

நான்கு வயது சிறுமிக்கு மதுபானம் பருக்கிய குற்றச்சாட்டின் கீழ் அவரின் தாய்மாமன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓல்ட்டன் தோட்டப் பகுதியிலேயே இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடும்ப வறுமை காரணமாக சிறுமியின் தாய் 18 மாதங்களுக்கு முன்னர் மத்திய கிழக்கு நாட்டுக்குத் தொழிலுக்கு சென்றுள்ளார்.

தாய் உலப்பனை பகுதியைச் சேர்ந்தவர். வெளிநாடு செல்வதால் தனது 9 வயது மகனையும் மற்றும் 4 வயது மகளையும ஓல்ட்டன் தோட்டத்தில் உள்ள தனது தாயிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில், தமது வீட்டுக்கு வரும் மாமா தங்கைக்கு மது பருக்கியுள்ளார் என 9 வயது சிறுவன் உலப்பனை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்று மாலை மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார பணிப்புரையின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அவர் இன்று ஹட்டன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



# திருமுறிகண்டியில் கோர விபத்து ஒருவர் மரணம்; மூவர் படுகாயம்





முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியில் திருமுறிகண்டிக்கும் கொக்காவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் இன்று காலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடு ஒன்றிலிருந்து வருகை தந்தவர்களை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அழைத்துப் பயணித்துக்கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் ஒன்று ஏ - 9 வீதியின் 241 ஆவது கிலோமீற்றருக்கும் 242 ஆவது கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட பகுதியில் முன்னே சென்று கொண்டிருந்த பாரவூர்தி ஒன்றுடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜனாதிபதியையும்...

அவர் இன்று ஆற்றிய உரையின் சாராம்சம் வருமாறு:-

“ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது அரசமைப்பிலும் தெளிவாக உள்ளது. அதை இப்போது உயர் நீதிமன்றமும் தெளிவுபடுத்தி விட்டது.

இந்தநிலையில் ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான அரசமைப்புப் பிரிவுகளில் மாற்றம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டிய தேவை எதுவும் இல்லை.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற அரசமைப்பின் 83 (ஆ) பிரிவு இவ்விடயங்களில் சம்பந்தப்பட்டது அல்ல. அதை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் இல்லை. அதை மாற்றி அமைப்பதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்ற கருத்து இருந்ததாலேயே 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அதை மாற்றாமல் அப்படியே விடுகின்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இணக்கத்தோடுதான் அப்படியே அதை விட்டுவிட முடிவு எடுக்கப்பட்டது. அதனால் சர்ச்சைகளோ குழப்பங்களோ ஏதுமில்லை. ஏற்கனவே ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்ட விடயம். இந்த 83 (ஆ)பிரிவு அரசமைப்பில் இருப்பதால் எந்தக் குழப்பமும் புதிதாக வந்துவிடாது.

ஆனால், இந்தப் பிரிவுக்கு திருத்தம் கொண்டு வருகின்றோம் என்று குழம்பத்தை ஏற்படுத்த ஜனாதிபதியின் தரப்பு முயலுகின்றனர் என்று தோன்றுகின்றது. அந்தப் பிரிவைத் திருத்த சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிலைப்பாடு வருமானால், அதைக் காட்டி தம்முடைய பதவிக்காலம் 5 வருடங்கள்தானா என்பதை ஒட்டிய சர்ச்சையைக் கிளப்பலாம் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார் போலும்.

எது, எப்படி என்றாலும், நாடு வரும் ஒக்டோபர் 17 இற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. அது சட்ட ரீதியான கட்டாயம். அதில் கை வைக்க அல்லது தேர்தலைத் தள்ளிப்போட முயற்சி எடுக்கப்பட்டால் அரசையும் ஜனாதிபதியையும் மக்கள் வீதி வீதியாக துரத்தி அடிப்பார்கள். ஓட ஓட விரட்டுவார்கள். அதனை முன் எச்சரிக்கையாகக் கூறி வைக்க விரும்புகின்றேன்.” - என்றார் சுமந்திரன் எம்.பி.

### பொலிஸ் சார்ஜன்ட்...

அநுராதபுரம் – ருவன்வெலி மஹா சாயவில் உள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்டே நேற்று இரவு அவரின் சேவைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் 55 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் எனத் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் குழுவின் முடிவு

தற்போதைய நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் ஆகக் கூடியது இன்னும் சுமார் ஒரு வருடம் தான். எனினும் அடுத்த மூன்று மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடும் என்பதுதான் அரசியல் கள நிலைவரம்.

அதற்கிடையில், இப்போது வெற்றிடமாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை கைப்பற்றி விட வேண்டும் என்ற ரெலோவின் அக்கப்போர் சூடுபிடித்திருக்கின்றது. இவ்விடயத்தில் தீர்மானிக்கும் சக்தியான தமிழரசு கட்சி எம்.பிக்களின் குழு நேற்று கூடிப் பந்தை - முடிவெடுக்கும் பொறுப்பை - தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு மற்றும் மத்திய குழுவின் பக்கம் அடித்து விட்டுப் பார்த்து நிற்கின்றது.

தமிழரசின் அரசியல் குழுவும் நேற்றுக் கூடி விடயங்களை ஆராய்ந்து முடிவெடுத்துள்ளது. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் மற்றும் அரசியல் குழுக் கூட்டங்களில் இவ் விடயத்தை ஒட்டி மூன்று அம்சங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

ஒன்று - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லாத பிற கூட்டணியில் தாங்கள் இடம்பெற்றிருக்கின்றோம் என்ற நிலைப்பாட்டில் ரெலோவும் புளொட்டும் நீடிக்கும் வரை, கூட்டமைப்பு நாடாளுமன்றத் தலைமைப் பதவியை அக்கட்சிகளுக்கு வழங்க முடியாது.

அடுத்தது - இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் வழிகாட்டுதலைப் பெற்று ஒரு தீர்மானத்தை நாடாளுமன்ற குழு முன்னெடுக்க வேண்டும்.

மூன்றாவது - கட்சியின் தலைமை தொடர்பான விடயம் வழக்கில் இருக்கின்றமையால், அது பற்றிய தீர்மானம் வரும் வரை - சிக்கல் தீரும் வரை - இந்த நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி பற்றிய தீர்மானமும் முடிவெடுக்கப்படாமல் தள்ளிப் போக வேண்டும்.

- இந்த மூன்றாவது கருத்தைக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம் நேற்றிரவு நடந்த கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முத்தாய்ப்பாக வைத்த போது, அது கட்சியின் அரசியல் குழுவின் ஏனைய உறுப்பினர்களாலும் ஏற்கப்பட்டதாகத் தெரிகிறது.

நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா பங்கு பற்றவில்லை. அதனால் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம்தான் அந்த அரசியல் குழுக் கூட்டத்தில் தலைமையில் நிலையில் கருதப்பட வேண்டியவர். அவர் வைத்த அந்தக் கருத்தியலில் ஆழமான விடயங்கள் உண்டு.

கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு குறித்த விடயம் வழக்கில் சிக்கி இருப்பதால், அதுவரை இருந்த தலைவர் என்ற முறையில் மாவை சேனாதிராஜா அப்பதவியில் தொடர்கின்றார். அவ்வளவுதான். அந்தளவு பங்களிப்பே - கௌரவமே - அவருக்கு இன்று கட்சிக்குள. ரெலோவின் செல்வம் அடைக்கலநாதனை கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவராக நியமிக்கும் மாவை சேனாதிராஜாவின் பகிரங்க அழைப்பும் எத்தனமும் அவரது கட்சி எம்.பிகளாலும் கட்சியின் அரசியல் குழுவினாலும் உதாசீனப்படுத்தப்பட்டு நிராகரிக்கப்பட்டதன் பின்னணி இதுதான்.

இன்னொரு விடயமும் உண்டு. கட்சியின் வழக்கு என்பதும், அதையொட்டிய நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு என்பதும் வேறு பல விதங்களில் அர்த்தப்படுத்தப்பட்டாலும், அதன் பிரதான அம்சம் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறிதரன் தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு எதிராக நீதிமன்றம் தடை விதித்திருக்கின்றது என்பதுதான்.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக வர சிறிதரன் விரும்புகின்றார். அதற்கு முழு உரித்தும் அவருக்கு உண்டு. ஆயினும் இவ்விடயத்தில் சட்டத் தடை ஒன்று இருப்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

அவர் அந்தப் பதவியை ஏற்றால், கட்சித் தலைமைப் பதவியை ஏற்பதற்கு நீதிமன்றம் தடை விதித்த பின்னணியில், வேறு ஒரு வகையில் - வழியில் - கட்சியை வழிநடத்தும் விடயத்தை அவர் தந்திரோபாயமாக முன்னெடுக்கின்றார் என்று அது அர்த்தப்படுத்தப்பட்டு விடலாம் என்று கருதி, இந்த வழக்கு முடியும் வரை நாடாளுமன்றக் குழுத் தலைவர் தேர்வு இடம்பெறாது என்ற முடிவை அரசியல் குழுவில் பிரேரித்திருக்கின்றனர் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சிவஞானம் போன்றவர்கள் என்றும் கருத வேண்டி உள்ளது. வழக்கு முடியும் வரை இவ்விடயம் தள்ளிப் போடப்படுவது நல்லதுதான்.



# நுவரெலியாவில் விபத்து; 40 பேர் ஆஸ்பத்திரியில்!





**(ஆ.ரமேஸ், மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா – கண்டி பிரதான வீதியின் டொப்பாஸ் பகுதியில் அதி சொகுசு பஸ் ஒன்று இன்று (11) அதிகாலை 4.30 மணியலவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த பஸ் விபத்தில் சிக்கிய 40 பயணிகள் காயங்களுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் பஸ் விபத்தில் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோரில் 07 பேர் அவசர சிகிச்சை பிரிவிலும் ஏனைய 33 பேர் சாதாரண சிகிச்சை பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று நுவரலியா மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நுவரெலியா தனியார் விடுதி ஒன்றிலிருந்து 42 பயணிகள் திருகோணமலைக்கு சுற்றுலாபயணம்மேற்கொண்டு அதி சொகுசு பஸ்ஸில் பயணித்துள்ளனர்.

இந்த பஸ் நுவரேலியா கண்டி பிரதான வீதியில் டொப்பாஸ் பகுதியில் சென்ற போது திடீரென ஏற்பட்ட கோளாறு காரணமாக நடு வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதேநேரத்தில் பஸ்ஸைச் செலுத்திய சாரதி சாமர்த்தியமாக பஸ்ஸை வீதி பாதுகாப்பு தடையில் மோதி பாரிய விபத்தைத் தடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை நுவரேலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் சேவை முற்றிலும் பாதிப்பு!



**(மஸ்கெலியா நிருபர்)**

மலையக ரயில் பாதையில் ரயில்கள் சேவையில் இல்லாததால் ஹட்டன் ரயில்வே நிலையம் வெறிச்சோடி காணப்படுகிறது.

இதனால் உல்லாச பயணங்கள் மற்றும் பயணிகள் பாரிய அளவில் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

நாளாந்தம் ரயில் சேவையைப் பயன்படுத்தி வந்த அரச ஊழியர்கள் தங்களது பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

ஆசிரியர்கள் பாரியளவில் சிரமத்துக்கு ஆளாகிய நிலையில் ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்திக் கடமைக்கு சென்றனர்.

சிவனடி பாத மலைக்கு வந்த உல்லாச பயணங்கள் ஹட்டன் நகரில் இருந்து எல்ல, நானுஓயா, ஒய்ய, இதல்கஸ்தனை மற்றும் கண்டி பகுதிக்கு செல்ல பஸ்களை நாடினார்.



# அக்கரைப்பற்று கனிஷ்ட வித்தியாலயத்தில் இஸ்லாமிய புதுவருட சிறப்பு நிகழ்வுகள்

**(எம்.ஏ.றமீஸ்)**

முஹர்ரம் இஸ்லாமிய புதுவருடத்தைச் சிறப்பிக்கும் வகையில் அக்கரைப்பற்று கனிஷ்ட வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட நிகழ்வு நேற்று (10) புதன்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏச்.எச்.முஹம்மது ஹாறுக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது சிறப்பு அதிதியாக அஷ் ஷேய்க் ஏ.என்.எம்.ஜுனைட் நஸீர் நளீமி கலந்து கொண்டு முஹர்ரம் புதுவருட சிறப்பு தொடர்பிலும், அதன் முக்கியத்துவம் தொடர்பிலும் மாணவர்களுக்கு சிறப்புரை நிகழ்த்தினார்.

இதன்போது மாணவர்கள் இஸ்லாமிய நடைமுறைகளைப் பின்பற்றி வாழும் வகையில் பல்வேறு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களும் இதன்போது எடுத்தியம்பப்பட்டது. மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் மலர்ந்திருக்கும் புத்தாண்டு சிறப்புற அமைய அனைவருக்கும் இறைவன் அருள் புரிய வேண்டுமென இதன்போது பாடசாலை அதிபர் தெரிவித்தார்.








# புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம்
## வடமேல் மாகாண ஆளுநர் தலைமையில்



( கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் புத்தளம் மாவட்டத்தின் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கல்வி முன்னேற்றம், விளையாட்டு அபிவிருத்தி, பாதை அபிவிருத்தி, சுகாதாரம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, நீர் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் மற்றும் அவற்றின் தற்போதைய தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் புத்தளம் மாவட்டத்தின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் ஒவ்வொரு துறை ரீதியாகவும் தனித்தனியான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர் எனவும் அதன் ஊடாக மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் துரித கதியில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது தனது நோக்கம் என்றும் ஆளுநர் நஸீர் அஹமட் இதன்போது சுட்டிக் காட்டினார்.

புத்தளம் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநனர் நஸீர் அஹமட் காட்டிவரும் கூடுதல் கரிசனை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அமல் சிந்தக மாயாதுன்ன, உள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலுக்கு வருகைதந்திருந்தனர்.





# திருவிழாக் காலங்களில் உணவுக் கடைகளை விசேட பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்!

## திருக்கோவில் கூட்டத்தில் தீர்மானம்



**(வி.ரி.சகாதேவராஜா)**

திருவிழாக் காலங்களில் ஆலய வளாகத்தில் நடத்தப்படும் உணவுக் கடைகள் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை உற்சவம் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக் கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை உற்சவம் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது கடந்த திங்கட்கிழமை திருக் கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தங் கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

திருக்கோவில் ஶ்ரீ சித்திரவேலா யுத சுவாமி ஆலய ஆடி உற்சவ மானது எதிர்வரும் 18 ஆம் திகதி கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் 04 ஆம் திகதி ஆடி அமாவாசை தீர்த் தோற்சவத்துடன் நிறைவடையவுள் ளது.

இந்தக் காலப் பகுதியில் ஆலயத் தில் மேற்கொள்ளப்படவேண்டிய நலன் புரி சேவைகள் தொடர்பாக திருக் கோவில் பிரதேசத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களதும் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி பல்வேறு விடயங்கள் கலந் துரையாடப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் உதவி பிரதேச செயலாளர் திரு மதி எஸ்.நிருபா, திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.எம். மோகனகாந்தன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ், திருக்கோவில் பிரதேச சபை செயலாளர் திருமதி வீரபத்திரன, திருக்கோவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந் திரன், கிராம சேவைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் என்.கந்த சாமி மற்றும் திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள், திருக்கோவில் பிரதேச திணைக்களங்களின் தலைவர்கள், மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# ஐந்து வருடங்களுக்குப் பின்னர் நடந்த
# வவுனியா தெற்கு விளையாட்டு போட்டி









**(கே.வசந்தன்)**

வவுனியா தெற்கு வலயத்தின் விளையாட்டுப் போட்டி 5 வருடங்களுக்கு பின்னர் இடம்பெற்றுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று (10) பிற்பகல் இடம்பெற்றது.


வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனை முன்பாக பான்ட் அணி வகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் அதிதிகள் வரவேற்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேசியக் கொடி, வலயக் கொடி, கோட்டக் கொடி, தெற்கு வலய பாடசாலைகளின் கொடிகள் ஏற்றப்பட்டு சத்தியப் பிரமாண நிகழ்வின் பின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதிதிகள் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களால் கௌரவிக்கப்பட்ட பின்னர், 2023 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் சாதித்த வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

வவுனியா தெற்கு வலயக கல்விப் பாணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், மற்றும் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், துணுக்காய் கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெய்கீசன், மன்னார் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தபேந்திரலிங்கம் உள்ளிட்ட பலரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# தமிழ் அறிஞர் த.துரைசிங்கம் நினைவு நூல் வெளியீடு!





தமிழ்அறிஞர்த.துரைசிங்கம்நினைவு நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை திருமதி வானதி காண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொண்டார்.

துரைசிங்கத்தின் நினைவு உரையை உடுவை எஸ். தில்லை நடராசா நிகழ்த்தினார்.

நூல் அறிமுக உரை எழுத்தாளர் வி.ரி. இளங்கோவனால் நிகழ்த்தப்பட்டது.

'இலக்கியப் பரல்கள்' என்ற நூல் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் வெளியீடு செய்யப்பட்டது.

நூல் வெளியீட்டின் போது சிறப்புப் பிரதியை கொழும்பு சைவ மங்கையார் வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவனிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

நூல் பற்றிய கருத்துக்களை விரிவுரையாளர் கீதா கணேசன், இலக்கிய சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன், தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், மூத்த பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

695 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் துரைசிங்கத்தின் இலக்கியப் பங்களிப்பின் தொகுப்பாக உள்ளது.

இந்தத் தொகுப்பில் "ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு", "ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்", "பைந்தமிழ் வளர்த்த ஈழத்துப் பாவலர்கள்", "தமிழ் இலக்கியக் களஞ்சியம்" ஆகிய அவரது நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்த நூலின் விடயப் பரப்பு தமிழ் இலக்கியம் பற்றிய தகவல்களை அறிவதற்கும் காலம், இடம் சார்ந்த இலக்கியப் போக்கின் இயல்புகளைப் புரிந்து கொள்வதற்கும் அவை சார்ந்த பகுப்பாய்வுகளையும் , விமர்சனங்களையும் மேற்கொள்வதற்கு உதவும்.

நூலின் பின் இணைப்பில் தமிழ் நூல்களும் ஆசிரியர்களும் இந்திய சாகித்திய அக்கடமி விருது பெற்ற தமிழ் நூல்கள், தமிழ் இணைய இதழ்கள், இலங்கையில் பேச்சு வழக்குச் சொற்களும் அவற்றின் பொருளும் தொகுக்கப்பட்டுள்ளன.

# ஓய்வு பெறும் உதவிக் கல்வி பணிப்பாளருக்குப் பாராட்டு!

சம்மாந்துறை வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர்ஏ.எல்.அப்துல் கபூர் தனது60ஆவதுவயதில்ஓய்வுபெறுவதையிட்டு வலயக் கல்விப் பணிமனையில் பிரிவுபசார நிகழ்வு நேற்று (10) புதன் கிழமை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் முன்னிலையில் இடம்பெற்றது.

சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பி.பரமதயாளன், என்.எம்.நாசிர் அலி, ஏ.எம்.மொகமட் சியாத் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



ஓய்வுபெறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், இறக்காமம் கோட்டக் கல்விப்பணிப்பாளர் யூ.எல். மகுமூதுலெவ்வை, உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் உரையாற்றினர். ஆரம்பநெறி ஆசிரிய ஆலோசகர் இசட். எம்.றிஸ்வி கவிதையாற்றி வாசித்தார்.

கபூரின்அர்ப்பணிப்பானசேவையைப் பாராட்டி வலயக்கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



# சாய்ந்தமருதில் ஆபத்தான நிலையில் உள்ள ஒடுக்கமான கொங்ரீட் பாலம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பழைய வைத்திய சாலை வீதியிலுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்து காணப் படுகிறது.

இதனால் அந்தப் பாலத்தில் பயணிப் போர் அச்சத்துடனே பயணித்து வருகின் றனர்.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந் துள்ள ஆயுள்வேத வைத்தியசாலை, கடற்கரைப் உப பூங்கா, தபாலகம், பாட சாலை, தொழில் பயிற்சி நிலையம், கல்முனை பிராந்திய மருத்துவ களஞ் சிய அறை வணக்க ஸ்தலங்கள் மற்றும் தொழில் நிமித்தமான பயணங்களை மேற்கொள்வோர் இந்தப் பாலத்தின் வழியே பயணிக்கின்றனர்.

எனவே அபாயகரமான நிலை யில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியாக விஸ்தரிப்பு செய்யப்பட வேண்டும் என்பது சாய்ந்தமருது மக்களின் விருப்பமாகும்.

இருப்பினும் இந்த பிரதேச மக்க ளால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இந்தப் பிரச்சினைக் குத் தீர்வை தருவதாக தேர்தல் காலங் களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கி னாலும் அவை எதுவும் நிறைவேற்றப் படுவதில்லை என்று விசனம் தெரி வித்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது இந்தப் பாலத்தை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான காலமாக இருந்த போதிலும் கை நழுவ விட்டமை கவலைக்கு உரிய விடயமாகும்.

இது தொடர்பில் அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவரு கின்ற நிலையில் தமக்கான உச்சக் கட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வர வேண்டும் என்று சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் பாலம் 5 கோடி ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படுவதாக தெரிவிக்கபட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிராமிய அபிவிருத்தித் திட்டம் மக்கள் பங்களிப்புடன் தயாரிப்பு





(சர்ஜூன் லாபீர்)

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 10 மில்லி யன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மல வத்தை-03 கிராமத்தில் விவசாய உட் கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார மேம் பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய் வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

அந்த வகையில் இந்த நிதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மக்கள் பங்களிப்புடனான கிராம அபிவிருத்தி திட்டம் ஒன்றை கிராம மக்களிடம் நேரடி யாக கேட்டறிந்து கொள்ளுவதற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் நிகழ்வு நேற்று (10) மல்வத்தை-03 பல்தேவைக் கட்டடத்தில் கிராம சேவகர் எம்.ஐ சப்றாஜ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர் எம்.பி.எம் யாஸீர் ஆகியோர் ஒழுங்கமைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப் பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியா கச் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு மக்கள் பங்களிப்புடனான கிராமிய வளத் திட்டத்தின் முக்கியத் துவம், அதன் நோக்கம் ஆகியவற்றைத் தெளிவுபடுத்தினார்.

மேலும் இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலா ளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண் டார்.

விவசாய அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர் பள்ளிவாசல் நிர்வாகிகள் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள்,பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தித் திட்டத்தை தயா ரிக்கும் நிகழ்வுக்குப் பிரதம வளவாள ராக அக்கரைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.ஜமாலி கலந்து கொண்டார்.



# ஜனசபா தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் சமூகமட்டப் பிரதிநிதிகளுக்குத் தெளிவூட்டல்





**(சர்ஜுன் லாபீர்)**

அரசாங்கத்தின் ஜனசபா தேசிய வேலைத் திட்டம் தொடர்பாக கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சமூக மட்டப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தும் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை (08) சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் அவர்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள சமூகமட்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலோடு இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம வளவாளராகச் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஸீக் கலந்து கொண்டு சமூகமட்ட பிரதிநிதிகளுக்கு ஜனசபா வேலைத் திட்டத்தின் நோக்கம், முக்கியத்துவம், மற்றும் இந்த வேலைத் திட்டம் தொடர்பாக சமூகமட்ட பிரதிநிதிகளின் செயற்பாடுகள் என்பவற்றை தெளிவுபடுத்தினார்.

இந்த நிகழ்வில் பிரதேச ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் எம்.ஏ அஸ்ரப், ஜனசபா தேசிய வேலைத்திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம். என். எம். சசீர், எம்.சதாத், எப்.ஜெஸீமா, எப்.சுரைகா ஆகியோர் உட்பட சமூக மட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையை நாளை வெள்ளிக்கிழமை மூட முடிவு!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாத யாத்திரீகர்களுக்கான காட்டுப்பாதையை மேலும் ஒரு நாள் திறந்து வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நாளை (12) வெள்ளிக்கிழமை மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.ஜெகராஜன் தெரிவித்தார்.

களுதாவளை கதிர்காம பாதயாத்திரை ஒன்றியம் ஒரு நாள் பாதைத் திறப்பை நீடிக்குமாறு விடுத்த கோரிக்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம ஆகியோரின் பரிசீலனைக்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இந்த வருட பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை மூடப்படவுள்ளது.

இந்த முறை இதுவரை இந்தப் பாதையால் 34 ஆயிரம் பக்தர்கள் பயணித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை கடந்த 30 ஆம் திகதி திறக்கப்பட்டு கடந்த 12 தினங்கள் அடியார்கள் செல்ல அனுமதி வழங்கப்படடுள்ளது.

கதிர்காமம் மற்றும் உகந்தமலை முருகனாலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் 06 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 22ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

# உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் மற்றும் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலய அதிபர் ஏ.எல்.அபுல் ஹஸன் ஆகியோர் நேற்று (10) புதன் கிழமை நியமனம் பெற்றுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை மூப்பு அடிப்படையிலான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் இருவரும் சித்தியடைந்தனர்.

அந்தவகையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக ஏ.எம்.எம்.தாஹிரும் கல்குடா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக ஏ.எல்.அபுல் ஹஸனும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரால் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு நினைவுச் சின்னம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சிரேஷ்ட போதனாசிரியர்களான எம்.எம்.செய்னுதீன், எம்.ஐ. பாரூக் ஆகியோர் அண்மையில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபல்யூ.ஜீ.திஸாநாயக்கவை நட்பு ரீதியாக சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, கிழக்கு மாகாண கல்வித் துறைக்காக அர்பணிப்புடன் சேவையாற்றி வரும் கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கவுக்கு அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சிரேஷ்ட போதனாசிரியர்களால் நினைவுச் சின்னமொன்று வழங்கப்பட்டது.

நிகழ்வில் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட போதனாசிரியரான எம்.எம்.பாசிலும் கலந்து கொண்டார்.



# மன்னார் மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரியாக பீ.பிரபானந்தன் நியமனம்!



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆண்டாங்குளம் கிராமத்தில் வசிக்கும் சமூக சேவையாளர் பீ.பிரபானந்தன் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஷ ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகாரங்களுக்கான இணைப்பாளர் எஸ். என்.முஹம்மதால் இந்த நியமனக் கடிதம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை (09) கொழும்பில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் பிரதேச செயலக பிரிவின் உப அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கான நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரியாக சமூக சேவையாளர் பீ.பிரபானந்தன் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொழிலாளர்களின் 1700 ரூபா விடயத்தில் ஜனாதிபதி உரிய நடவடிக்கையை எடுப்பார்

## சப்ரகமுவ ஆளுநர் நவீன் திஸநாயக்க தெரிவிப்பு

(பொகவந்தலாவ நிருபர் எஸ் சதீஸ்)

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1700 ரூபா சம்பள விடயத்தில் நாட்டின் ஜனாதிபதி உரிய நடவடிக்கையை முன்னெடுப்பார் என்று சப்ரகமுவ ஆளுநர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.



பலாங்கொட பின்னவலை சிசில்டன் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று (10) இரண்டு மாடி கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த ஆளுநனர் நவீன் திஸநாயக்க, எதிர்வரும் காலங்களில் இந்தத் தேயிலைத் துறையை முன்னெடுத்து செல்வது என்பது கடினமான ஒரு விடயம். ஜனாதிபதி 1700ரூபா வர்த்தமானி ஒன்றை அண்மையில் வெளியீட்டு இருந்தார். 1700 ரூபா என்பது சிறிய தொகை. சாதாரணமாக கிராம புறங்களில் தொழில் புரியும் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 3000 ரூபா சம்பளமாக பெறுகிறார்கள்.

நாட்டின் பொருளாதாரத்தை ஈட்டிக் கொடுக்கின்ற பெண் தொழிலாளர்களுக்கு ஏன் 1700 ரூபா வழங்க முடியாது என்று முதலாளிமார் சம்மேளனம் கூறுகிறது. பாரிய அளவில் தேயிலை துறையில் நட்டம் ஏற்படுவதாகக் கூறுகிறது. ஆனால் இந்த இரண்டு வருடங்களில் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு பாரிய இலாபம் கிடைத்துள்ளது சமூகம் என்று நோக்குகின்ற போது கலந்துரையாடலை மேற்கொண்டு தொழிலாளர்களுக்கு இந்த சம்பளத்தை வழங்கவேண்டும். இதனை செய்வதற்கு அவர்கள் விருப்பம் இல்லை. ஜனாதிபதி முதல் மலையகத்தில் உள்ள அனைத்து தலைவர்களுக்கும் பெருந்தோட்ட மக்கள் படும் கஷ்டம் தெரியும்.

தினந்தோறும் வெறுமனே 1000 ரூபாவுக்குத் தொழில் செய்ய முடியாது. பெருந்தோட்ட நிறுவனங்கள் யோசித்து நல்லதொரு தீர்மானத்துக்கு வரவேண்டும். பெருந்தோட்ட மக்கள் இந்தியாவில் இருந்து அழைத்து வரபட்டவர்கள். ஆங்கிலேயர் காலப் பகுதியில் அதற்கென ஒரு பாரிய வரலாறு உள்ளது.

பொன்னியன் செல்வன் என்ற திரைப் படத்தின் ஊடாக கல்கி என்பவருடைய வரலாற்றை நாம் பார்த்துள்ளோம். தென் இந்தியாவில் இருந்து ஒரு தொகுதியினர் மலேசியாவுக்குச் செல்வதை நாம் அதில் பார்த்தோம். இது போன்ற வரலாற்றை எவராலும் அழிக்க முடியாது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்கள் நன்றாக சிந்தித்து செயபட கூடியவர்கள். பிரபாகரன் யுத்தம் செய்தாலும் பல்கலைகழகங்களை அவர் மூடவில்லை. பல்கலைகழகங்களை மூடாமல் வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் அதிகமானோர் மதுபானம் அருந்துகின்றனர். இதனை உடனடியாக நிறுத்த வேண்டும். பெருந்தோட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள் பெருந்தோட்ட மக்களின் உழைப்பால் சொகுசு வாகனங்களில் சொல்லுகிறார்கள்.

இதனை மாற்றியமைக்க வேண்டும். தென்இந்தியாவின் தமிழ் நாட்டு முதல்வர் ஸ்டாலின் புதிய புதிய வேலைத் திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருகிறார்.- என்றார்.





# வடமேல் மாகாண ஆளுநரின் வாராந்த பொதுமக்கள் சந்திப்பு

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் வாராந்த பொது மக்கள் சந்திப்பு நேற்று (10) புதன்கிழமை வடமேல் மாகாண சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வடமேல் மாகாணத்தின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வருகை தந்திருந்த பொது மக்களின் அரச தொழில் இடமாற்றங்கள், காணிப் பிரச்சினைகள், வேலைவாய்ப்பு, எதிர் வரும் நாள்களில் நடைபெறவுள்ள ஆசிரியர் நியமனங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளுடன் ஆளுநரை நாடி வந்திருந்த பொது மக்களுக்கு உடனுக்குடன் தீர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆங்கில உயர் டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களை ஆங்கில ஆசிரியர்களாக நியமித்தல், பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை சீராக முன்னெடுத்துச் செல்லும் வகையில் இடமாற்றங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து ஆளுநர் நஸீர் அஹமட் அதிகாரிகளுக்கு தேவையான பணிப்புரைகளை விடுத்தார்.

இந்தப் பொது மக்கள் சந்திப்பில் மாகாண பிரதம செயலாளர் தீபிகா கே. குணரத்தின, ஆளுநரின் செயலாளர் இலங்கக்கோன், பிரதம அமைச்சின் செயலாளர் நயனா காரியவசம் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# திருகோணமலை சிவன் ஆலய தேர்த்திருவிழா

(எஸ். கீதபொன்கலன்)

திருகோணமலை ஸ்ரீவிசாலாட்சி சமேத விஸ்வநாத பெருமான் ஆலய (சிவன் கோவில்) பிரமோற்சவ தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை விமரிசையாக நடைபெற்றது.



# கொட்டகலை அசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரி இயங்கவுள்ளது!







(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

அண்மையில் நியமனம் வழங்கப் படவிருக்கும் ஆசிரியர் உதவியாளர்கள் ஊடாக மீண்டும் கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரி இயங்கும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இன்று (11) வியாழக்கிழமை பலாங்கொட மரத்தென்ன தமிழ் வித்தியாலயத்துக்கு மேற்கொண்ட விஜயத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கைநழுவிப் போகவிருக்கும் கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது. கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் வளவாளர்கள் பெரும் தொகையினர் காணப்படுகின்றனர். எனினும் அந்தக் கல்லூரி இயங்குவதில்லை.

ஏன்எனில் அந்த கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு ஒருவர் கூட இல்லை. கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியைதக்கவைத்துக்கொள்ளவேண்டுமானால் அதனை மீண்டும் இயங்க செய்ய வேண்டும். இதற்கு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் பெறுபவர்களை அங்கு பயிற்சிக்கு உள்வாங்குதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார்.

இதேவேளை மரத்தென்ன தமிழ் வித்தியாலயத்துக்குச் சென்ற கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டார். நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதாகவும் குறிப்பிட்டார்.

அங்கு கல்வி இராஜாங்க அமைச்சருக்கு பாடசாலை நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தப்பட்டது.

# மறைந்துபோகும் மட்பாண்ட உற்பத்தி!



**மட்பாண்டங்களின் இன்றைய நிலை தொடர்பாக கவனம் செலுத்தும் முகமாக வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளைக் கிராமத்திலுள்ள மட்பாண்ட உற்பத்தியாளராக - 25 வருட காலம் மட்பாண்ட உற்பத்தியை மேற்கொண்டு வரும் சந்திரபோஷ் வழங்கிய நேர்காணல் இது.**

உலகின் மிகப் பழமையான நாகரிகங்களில் மட்பாண்ட கைத்தொழில் ஒன்றாக உள்ளது. இன்றைய நாகரிக மாற்றத்தின் பிடியில் முழு உலகமே சிக்கியுள்ள நிலையில் இந்து நாகரிக உலகத்துடன் போராடியேனும் மட்பாண்ட உற்பத்தி போன்ற சில பாரம்பரிய கைத்தொழிலாளர்கள் பாரிய போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இயற்கையான முறைகளில் தயாரித்த பொருள்களைப் பயன்படுத்திய மனிதன் அன்று ஆரோக்கியமாக வாழ்ந்தான். நவீன காலத்தில் நவீன உற்பத்திப் பொருள்களின்பால் ஈர்க்கப்பட்ட மனிதன் அதன் பின்னால் ஓடும் நிலை ஏற்பட்டுவிட்டது. வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் வாழ்வில் மனிதனும் நவீன முறைகளை கையாளுகின்றான்.

ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகளை விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றோம். மட்பாண்ட கொள்வனவில் மக்கள் அக்கறை செலுத்தாத காரணத்தால் விற்பனையும் குறைந்துள்ளது. இதன் அடிப்படையில் இவ் நேர்காணல் அமைந்துள்ளது.

**கேள்வி: மட்பாண்ட தொழில் மீது உங்களுக்க எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

பதில்: எனது தந்தையாரிடமிருந்து கற்றுக் கொண்டேன். பரம்பரையாக இத்தொழில் செய்து வருவதால் 17 வயதில் ஆரம்பித்த இத்தொழில் 42 வயதாகியும் இன்று வரை தொடர்ந்து செய்து வருகின்றேன்.

இத்தொழிலினை செய்வது எண்ணி நான் பெருமை அடைகின்றேன். பரம்பரை சார்ந்து வந்த தொழில் என்பதால் இம் மட்பாண்ட தொழிலில் ஆர்வம் ஏற்பட்டது. இத் தொழிலே எனது வாழ்க்கைக்கு உதவி புரிந்துள்ளது. அதனால் தற்போது அதிக ஆர்வமும், இத் தொழிலை எண்ணி பெருமையும் அடைகின்றேன்.

**கேள்வி: மட்பாண்ட உற்பத்தியின் போது எவ்வாறான பொருள்களை உற்பத்தி செய்கின்றீர்கள்?**

பதில்: ஆரம்பத்தில் பல வகையான பலவிதமான பொருள்களை உற்பத்தி செய்து வந்தேன். ஆனால் தற்காலத்தில் மட்பாண்டங்களின் கேள்வி குறைவடைந்த நிலையில் சில பொருள்களை மாத்திரமே உற்பத்தி செய்து வருகின்றேன். ஆரம்பத்தில் பானை, சட்டி , பூச்சாடி, சிட்டி, முட்டி, ஆயிரம் கண்பானை, உண்டியல், அரிக்கன், சூட்டடுப்பு என பல வகை பொருள்களை உற்பத்தி செய்துள்ளேன். தற்போது சட்டிகள், பானைகள் மாத்திரமே அதிகம் உற்பத்தி செய்து வருகிறேன். ஏனைய பொருள்கள் கொள்வனவுக்கென கேட்கப்படும் பொருட்டு மாத்திரமே அதனை உற்பத்தி செய்து வழங்குகின்றேன்.

**கேள்வி: மட்பாண்ட பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருளை எவ்வாறு எங்கிருந்து பெற்றுக் கொள்கின்றீர்கள்?**

பதில்: முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இருந்தே இதற்கான களிமண்ணைப் பெற்றுக் கொள்கின்றேன்.



தொடர்ச்சி ▼

# மறைந்துபோகும் மட்பாண்ட உற்பத்தி!



தொடர்ச்சி▲

மூலப் பொருளை எடுத்துக் கொள்வதில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இருந்தே களிமண் ஏற்றப்பட்டு வருகின்றது. இக் களிமண்ணை ஏற்றுவதற்கான அனுமதி பெற்றுக் கொள்வதில் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. நான் தொழில் செய்கின்ற இக் கிராமத்தில் வசிப்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரிடம் அனுமதிக் கடிதம் பெற வேண்டும், அதன் பின்னர் பிரதேச செயலகத்திடம் அனுமதி பெற்று பின் மாவட்ட செயலாளரிடம் அனுமதி கடிதம் வாங்கி அதனை கமநல சேவையிடம் ஒப்படைக்க வேண்டும். கமநல சேவையிலிருந்து ஒரு படிவம் வாங்கி அதனை அனுமதிக் கடிதம் வாங்கிய ஒழுங்கிலே மீண்டும் அனுமதி பெற்ற பின்னரேஇந்த மண்ணை ஏற்றுவதற்கான பூரணமான அனுமதி கிடைக்கப்பெறும். ஆயினும் அனுமதிக்கு என விண்ணப்பித்த திகதியிலிருந்து இருபத்தைந்து நாள்களின் பின்னரே அனுமதி கிடைக்கப்பெறும்.

**கேள்வி:மட்பாண்டஉற்பத்தியை மேற்கொள்ளும் போது செய்யப்படுகின்ற படிநிலைகளை கூறுவீர்களா?**

பதில்: ஆம், முதலில் களிமண்ணைத் தூளாக உடைத்து அதனை கையால் குழைத்து தொட்டி ஒன்றினுள் போடுதல், அதன் பின் அதனை கையால் பிசைந்து வடிகட்டல் செய்யப்படும், வடிகட்டல் செய்யும் போது அதனுள்ளே உள்ள கற்கள் குப்பைகள் அகற்றப்படும். தனியே ஒரு சட்டிக்கு மாத்திரம் என்று எடுக்காது அண்ணளவாக 500 சட்டிக்கு தேவையான மண்ணை எடுத்துக் கொள்ள வேண்டும், தேவைக்கேற்ப பின்னர் உற்பத்தி பொருளை மாற்றிக் கொள்ளலாம். பின் மட்பாண்டம் செய்து கொள்ளும் சக்கரத்தில் வைத்து எமக்கு தேவையான பாத்திரத்தை வனைந்து கொள்ள முடியும். வனைந்து கொண்ட பாத்திரங்களை எடுத்து நிலத்திலிருந்து கையால் தட்டி அதனை அவ் வடிவத்திற்கேற்ப பதப்படுத்தி மாற்றிக் கொள்ளுதல், பின்னர் காய வைத்துக் கொள்ள முடியும், காயவைத்த பாத்திரங்களை சூளையிலிட்ட பின்னரே இறுதியாக விற்பனை செய்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**கேள்வி: சூளையில் போடுதல் செயற்பாட்டை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?**

பதில்: பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை அதாவது அண்ணளவாக 500 சட்டி பானைகளைச் செய்த பின்னரே சூளையில் போட முடியும். சூளைக்கு அருகில் ஒரு கிடங்கினுள் நெருப்பு மூட்டப்படும், அதனூடாகவே சூளைக்குத் தேவையான வெப்பம் கடத்தப்படும். சூளையினுள் தகரம் வைத்து அதன் மேல் விறகு வைத்து அதன் மேல் பானை, சட்டிகளை அடுக்குதல். அதற்கு மேல் மீண்டும் விறகு, பொச்சு மட்டைகள் வைத்து மேலே வைக்கோல் வைத்து வீடு மெழுகுதல் மாதிரி சாணத்தாலும், புற்று மண்ணாலும் மெழுக வேண்டும். இரண்டு மணித்தியாலங்கள் கட்டாயமாக சூளையில் சுடப்படல் வேண்டும். கூடுதலாக இரவில் சூளையில் போட்டால் காலையில் சூளை பிரிக்கக் கூடியதாக இருக்கும் பின்னர் அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து தனித்தனியாக அடுக்கி வைக்க முடியும்.

**கேள்வி: இத்தொழில் மேற்கொள்ளும் போது உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக நிற்பவர்கள் யார்?**

பதில்: இது பரம்பரை தொழில் என்பதாலும் இத்தொழிலிலும் தொழில்நுட்பத்துடன் கூடிய செயற்பாடுகள் காணப்படுவதாலும் இதனை நான் தனியாகவே செய்து வருகின்றேன். இத்தொழிலுக்கு அதிகம் பொறுமை அவசியமாகும். இதனை எல்லோராலும் செய்து விட முடியாது.

மட்பாண்ட உற்பத்தியின்பின் சூளையில் போடுதல், சூளை பிரித்தல், சட்டிகள், பானைகளை அதன் அளவுக்கு ஏற்ப அடுக்குதல், போன்ற பக்க வேலைகளுக்கு எனது குடும்பத்தினர் உறுதுணையாக நிற்கின்றனர்.

**கேள்வி: மழை காலங்களில் எவ்வாறு இந்தத் தொழிலை மேற்கொள்கின்றீர்கள்?**

பதில்: மழை காலத்தில் இந்தத் தொழிலை மேற்கொள்வதில்லை, ஏனெனில் மழை காலத்தில் மண்ணெடுப்பதே பாரிய பிரச்சினையாக இருக்கும். அதனை விட உற்பத்திப் பொருள்களுக்கான மண்ணையைப் பதப்படுத்தி, பொருள்களைக் காயவைத்து, சூளையில் போடுதல் போன்ற செயற்பாடுகள் எல்லாம் மழை காலத்தில் சாத்தியமாகச் செய்ய முடியாது. மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முதலிலே மழை காலத்தில் விற்பனைக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்து தயார்படுத்தி வைத்திருப்பேன். ஆதலால் மழை காலத்தில் இந்தத்

தொடர்ச்சி▼

# மறைந்துபோகும் மட்பாண்ட உற்பத்தி!

தொடர்ச்சி▲

தொழிலை மேற்கொள்வதில்லை.

**கேள்வி: நீங்கள் உற்பத்தி செய்கின்ற மட்பாண்டங்களை எவ்வாறான இடங்களுக்கு விற்பனை செய்கின்றீர்கள்?**

பதில்: முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவிப் பிரதேசத்தில் மட்பாண்ட உற்பத்தி காணப்படுகிறது. ஆகவே அப்பிரதேசம் தவிர்த்து ஏனைய முல்லைத்தீவிலுள்ள சிறு கிராமங்களுக்கு விற்பனை செய்து வருகிறேன். எமது அன்றாட தேவைக்கேற்பவே வருமானம் இருக்கின்றது.

**கேள்வி: அண்மைக் காலங்களில் பொருள்களை விற்பனை செய்வதில் உள்ள சவால்கள் எவை?**

பதில்: நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மக்களது வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அலுமினியம் மற்றும் சில்வர் பாத்திரங்களை தமது தேவைகளுக்கு பயன்படுத்தும் நாகரிக மனிதனாக இன்றைய மக்கள் மாறி உள்ளனர். இதன் காரணமாக மட்பாண்ட உற்பத்திகளின் விற்பனை இன்று குறைவடைந்து சென்றுள்ளது. மட்பாண்ட உற்பத்திகளின் விற்பனை வீழ்ச்சியால் அதனை நம்பி எமது வாழ்வாதாரத்தை மேற்கொண்ட போதும் போதிய வருமானம் இன்றியே உள்ளது. ஆரம்பத்தில் மொத்தமாக கொள்ளளவு செய்த கடைகளில் மட்பாண்ட பாவனையின் வீழ்ச்சியால் சில கடைகளில் மட்பாண்டங்களை கொள்வனவு செய்வதினை நிறுத்தி விட்டு சில கடைகள் மாத்திரமே சில்லறையாக கொள்வனவு செய்கின்றனர். தென்பகுதியில் சிங்கள மக்கள் மட்பாண்டங்கள் அதிகமாக பயன்படுத்துகின்ற போது நமது வடக்கு மக்கள் நாகரிக வாழ்க்கையில் மட்பாண்ட பாத்திரங்களை கைவிட்டுச் சென்றமை கவலைக்குரிய விடயமாகும்.

**கேள்வி: மட்பாண்ட பயன்பாடு பற்றி சமூகத்துக்குக் கூற விரும்பும் கருத்து யாது?**

பதில்: நான் எனது தொழிலை விளம்பரப்படுத்துவோ அல்லது விற்பனை அதிகரிக்கவோ இதனை கூறவில்லை. ஏனெனில் வேறு இடங்களிலும் மட்பாண்ட கைத்தொழிலைசெய்துகொண்டுவருகின்றார்கள். ஆயினும் உள்நாட்டு யுத்தம் ஏற்படுவதற்கு முன் ஆரம்பத்தில் இருந்த மட்பாண்ட பாவனை குறைவடைந்து தற்காலத்தில் மட்பாண்ட பாவனை அரிதாகவே காணப்படுகிறது. வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் நிலையில் இலகுவான சமையல், நேரம் மீதம் என்பதற்காக மட்பாண்ட பயன்பாட்டை குறைத்துக் கொள்ளும் மக்கள் ஆரோக்கியத்தில் கவனம் எடுக்கவில்லை. அண்மைக் காலமாக உணவுப்பழக்கம், வாழ்க்கை முறை காரணமாக நோய்கள் ஏற்பட்டு வருவதை அறிந்துள்ளோம். பாரம்பரிய மட்பாண்ட பாத்திரங்களின் பயன்பாடு ஆரோக்கியமான தாகவும், செலவு குறைந்ததாகவும் காணப்படுகிறது என்பதை கூற விரும்புகின்றேன்.

**சி.கதீசனா,**
*ஊடகக் கற்கைகள்,*
*யாழ்ப்பாண*
*பல்கலைக்கழகம்.*

# அம்பாறை முன்பள்ளி ஆசிரியர்கள் அக்கரைப்பற்றில் இன்று ஆர்ப்பாட்டம்!

**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இன்று அக்கரைப்பற்றில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

நிரந்தர நியமனம் கோரியும் சம்பள உயர்வு கோரியும் அவர்கள் இந்த அர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்ட முவீனங்களையும் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் அக்கரைப்பற்று கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் வாரிய அலுவலக முன்றலில் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

அதன் போது பலவித சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி கோஷமெழுப்பினர்.

அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியை ஒருவர் கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் வடமாகாண சபையால் மாதாந்த கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. மத்திய அரசு 5 ஆயிரம் ரூபா வழங்குகிறது.



ஆனால் கிழக்கு மாகாண சபை 4 ஆயிரம் ரூபா வழங்குகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடி மிகுந்த இலங்கையில் இந்த கொடுப்பனவு ஒன்றுக்குமே போதாது. எனவே முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர பதவியில் அமர்த்தி அதற்கான வேதனைத்தையும் வழங்க வேண்டும் என்று கூறினார் .

நிரந்தர நியமனம் என்ற எமது கோரிக்கையை அரசு செவிசாய்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் இறுதியில் ஜனாதிபதி, கல்வி அமைச்சர் மற்றும் ஆளுநருக்கான மகஜரை கிழக்கு மாகாண முன்பள்ளி வாரியத்திடம் ஒப்படைத்தனர்.



# நாடு திரும்பினார் நரேந்திர மோடி; எக்ஸ் தளத்தில் நன்றி தெரிவிப்பு!

ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார் பிரதமர் நரேந்திர மோடி. இன்று வியாழக்கிழமை காலை புதுடில்லியை வந்தடைந்தார்.

ஆஸ்திரேலிய அரசு, ஜனாதிபதி மற்றும் மக்களின் வரவேற்பு மற்றும் விருந்தோம்பலுக்கு எக்ஸ் தள பதிவில் பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

“இந்தப் பயணம் வரலாற்று சிறப்புமிக்கது. நமது தேசங்களுக்கு இடையிலான நட்புறவு தளைத்துள்ளது. வியன்னாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டது மகிழ்ச்சி. சிறப்பாக உபசரித்த ஆஸ்திரிய அரசு, ஜனாதிபதி கார்ல் நெஹாம்மர், மற்றும் மக்களுக்கு நன்றி” என அதில் குறிப்பிட்டுள்ளார்.

வியன்னாவில் இந்திய வம்சா வளியினர் இடையே பிரதமர் மோடி பேசி இருந்தார். அதேபோல சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியாவுக்கு செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மோடியின் ஆஸ்திரிய வருகையை சிறப்பாக திட்டமிட்டு, அதனை நல்ல முறையில் செயல்படுத்த வெளியுறவுத்துறை அமைச்சகம், பொலிஸார், ராணுவம் மற்றும் இந்தப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறார் என்று ஆஸ்திரேலிய ஜனாதிபதி கார்ல் நெஹாம்மர் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி உடனான சந்திப்பின் போது ஆஸ்திரியா – இந்தியா இடையிலான கலாசார பரிமாற்றம் குறித்து பேசி இருந்தார். யோகா, ஆயுள் வேதம் போன்றவற்றில் தங்கள் மக்களின் ஆர்வம் பெருகி உள்ளதாக கார்ல் நெஹாம்மர் தெரிவித்தார். தொடர்ந்து பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் பேசி இருந்தனர்.

# உத்தர பிரதேசத்தில் வெள்ளப் பெருக்கால் 60இற்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிப்பு!

உத்தர பிரதேசத்தில் வெள்ளப் பெருக்கால் 60 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், முதல்வர் யோகி ஆதித்யா நாத் ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உத்தர பிரதேசத்தின் பல்ராம்பூர், ஷ்ரவஸ்தி, பஸ்தி, கோரக்பூர், பல்லியா மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள ரப்தி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் பல்ராம்பூர், துளசிபூர், உத்ராலா ஆகிய பகுதிகளில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல்ராம்பூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், நேபாளத்தில் இருந்து கீழ்நோக்கி வரும் நீர் வரத்து காரணமாகவும், ரப்தி ஆற்றில் வெள்ளம் அபாயக் கட்டத்தைக் கடந்து பெருக்கெடுத்து ஓடுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் படகுகள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். எனினும், வெள்ளத்தில் மூழ்கி இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர்.



இந்த நிலையில், உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், இன்று வியாழக்கிழமை பல்ராம்பூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட்டார். இதேபோல், ஷ்ரவஸ்தி மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளையும் ஹெலிகொப்டர் மூலம் ஆய்வு செய்தார்.

பின்னர், ஷ்ரவஸ்தி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம் ஒன்றுக்கு வருகை தந்த யோகி ஆதித்யாநாத், பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து நலம் விசாரித்தார். அவர்களுக்கு உதவித் தொகைக்கான காசோலைகள் மற்றும் நிவாரணப் பொருள்களை முதல்வர் வழங்கினார்.

இதேபோல், பல்ராம்பூர் மாவட்டத்தில் உள்ள நிவாரண முகாமுக்குச் சென்ற முதல்வர், பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் தொகை மற்றும் நிவாரணப் பொருள்களை வழங்கினார்.



# உக்ரைனுக்கு இன்னும் ஆயுதங்களை வழங்குவோம் என்கிறார் அமெ. ஜனாதிபதி

உக்ரைனுக்கு இன்னும் ஆயுதங்களை வழங்குவோம் என்றும், போரில் ரஷ்யா வெற்றி பெறாது என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

அமெரிக்காவில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேட்டோ அமைப்பின் 75 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் நேட்டோ உச்சி மாநாடு நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளராக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் பங்கேற்றார். மாநாட்டின் தொடக்க விழாவில் அதிபர் ஜோ பைடன் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது,

வரவிருக்கும் மாதங்களில் அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு கூடுதல் வான் பாதுகாப்பு அமைப்புகள் உள்பட ஏராளமான ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளன.

நாங்கள் முக்கியமான வான் பாதுகாப்பு இடைமறிப்புகளை ஏற்றுமதி செய்யும் போது, போரில் உக்ரைன் முன்னோக்கி செல்வது உறுதி செய்யப்படும். இந்தப் போரில் ரஷ்யா தோல்வி அடைந்து வருகிறது.

2 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் புடினின் விருப்ப போரில், அவரது இழப்புகள் அதிர்ச்சி அளிக்கின்றன. போரில் மூன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய துருப்புக்கள் பலியாகினர். ஏறக்குறைய 10 லட்சம் ரஷ்யர்கள், பெரும்பாலும் இளைஞர்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறி உள்ளனர். ஏனெனில் அவர்கள் ரஷ்யாவில் எதிர்காலத்தை காணவில்லை.

போர் தொடங்கியபோது 5 நாட்களில் உக்ரைன் வீழ்ந்துவிடும் என்று அவர் நினைத்தார். இரண்டரை ஆண்டுகள் கழித்து இன்னும் நிற்கிறது, தொடர்ந்து நிற்கும். இந்தப் போருக்கு முன், நேட்டோ உடைந்து விடும் என்று புடின் நினைத்தார் என்பது அனைத்து நட்பு நாடுகளுக்கும் தெரியும்.

இன்று, நேட்டோ அதன் வரலாற்றில் இருந்ததை விடப் பலமாக உள்ளது. இந்த அர்த்தமற்ற போர் தொடங்கிய போது, உக்ரைன் ஒரு சுதந்திர நாடாக இருந்தது. இன்றும் அது சுதந்திர நாடாகவே உள்ளது.

இந்த போரில் ரஷ்யா வெற்றி பெறாது. உக்ரைனே வெற்றி பெறும். உலக பாதுகாப்பின் அரணாக நேட்டோ உள்ளது என்பதை நினைவில் நாம் கொள்வோம்.-என்று தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுமாறு பைடனுக்கு அழுத்தம்



ஜோ பைடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலக வேண்டும் என்று ஜனநாயக கட்சியினர் மாத்திரமன்றி, அவருக்கு நிதி வழங்கும் முக்கிய நபர்களும் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப்பை எதிர்கொள்வதற்கான தகுதியுடன் ஜோ பைடன் உள்ளாரா என்பது குறித்து மூடிய சந்திப்பொன்றை ஜனநாயக கட்சியினர் நடத்தியுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதி தேர்தலில் இருந்து ஜோ பைடன் விலக வேண்டும் என 7 ஆவது காங்கிரஸ் உறுப்பினரும் கோரியுள்ள நிலையில், ஜோ பைடன் தேர்தலில் போட்டியிடுவது குறித்து கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக இறுதியாக நடத்தப்பட்ட விவாதத்தின் போது வார்த்தைகளில் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியமை ஜோ பைடனின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதித்தன்மையை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஜனநாயக கட்சியின் மூத்த செனட் உறுப்பினரான சக்ஷுமர், ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கு ஜோ பைடன் உடற் தகுதியுடன் உள்ளார் என்று தனது ஆதரவை வெளியிட்டுள்ளார்.

தென் கரோலினா உறுப்பினரான ஜிம் கிளைபேர்னும் ஜோ பைடனுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டியில் ஜோ பைடன் தொடர்ந்தும் இருப்பது குறித்து ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்று இல்லினோய்ஸ் மாநில உறுப்பினர் டிக் டர்பின் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பு இடம்பெற்று சில மணி நேரத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட நியூ ஜேர்சி மாநில உறுப்பினர் மிக்கி ஷெரில், ஜோ பைடன் போட்டியில் இருந்து விலக வேண்டும் என வெளிப்படையாக கூறியுள்ளார்.

## வடக்கு லண்டனில் கொடூரம்; தாய், இரண்டு மகள்கள் கொலை!



வடக்கு லண்டனில் தாய் மற்றும் அவரது இரண்டு மகள்களைத் தாக்கிப் படுகொலை செய்த கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பிபிசி விளையாட்டு வர்ணனையாளரான ஜோன் ஹன்ட்டின் மனைவி கரோல் ஹன்ட் (வயது-61) , மற்றும் மகள்களான ஹன்னா ஹன்ட் (வயது-28), லூயிஸ் ஹன்ட் (வயது-25) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

ஹெர்ட்ஃபோர்ட்ஷையரில் உள்ள அவர்களது வீட்டிலேயே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர் 26 வயதான கைல் கிளிஃபோர்ட், எனவும் அவர் மயானத்தில் காயங்களுடன் இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தை விட்டு வெளியேறிய சந்தேக நபர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் காயங்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர்மீது அதிகாரிகளால் துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கங்கள் - 8

கனடா முரசு

வியாழக்கிழமை 11/07/2024

## கனடாவில் உயர்ந்து வரும் சராசரி வாடகைத் தொகை

கனடாவில் சராசரி வாடகை தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தஜூன்மாதம்சராசரிவாடகை தொகையானது 2185 டாலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

C2 ▶



# நேட்டோ இலக்கை அடைவதற்கான கனடாவின் திட்டம் அறிவிக்கப்படும்

### அமெரிக்காவில் தற்போது நடைபெறும் உச்சி மாநாட்டில்



ஒன்ராரியோ,ஜூலை 11

நேட்டோ இலக்கை அடைவதற்கான திட்டத்தை அமெரிக்காவில் நடைபெறும் நேட்டோ உச்சி மாநாட்டில் கனடா அறிவிக்க உள்ளதாக தெரியவருகிறது.

இந்த உச்சி மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்றுள்ளார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை பாதுகாப்புக்காக செலவழிக்கும் நேட்டோ இலக்கை எட்டாதமை குறித்த கனடிய அரசாங்கம் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது.

C2 ▶

# குழந்தை உட்பட மூன்று பேர் நெடுஞ்சாலை விபத்தில் பலி

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 11**

பிரிட்டிஷ் கொலம்பியாவின் நெடுஞ்சாலை 3இல் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

ஜூலை 9ஆம் திகதி காலை இந்த விபத்து பிரேசர் வெலி பகுதியில் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பெரியவர்களுடன், ஒரு குழந்தை இந்த விபத்தில் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.


டிரெக்டர் டிரெய்லர் ஒன்று பயணிகள் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்தது.

பயணிகள் வாகனத்தில் இருந்த இரண்டு பெரியவர்கள் சம்பவ இடத்தில் பலியானார்கள் எனவும், காயமடைந்த

C2 ▶



# கோபா அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனாவிடம் வீழ்ந்தது கனடா




கோபா அமெரிக்கா கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டியில் பலம் பொருந்திய ஆர்ஜன்டீனா அணியிடம், கனடா தோல்வியடைந்தது.

ஆர்ஜன்டீனா அணி இந்தப் போட்டியில் இரண்டுக்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் கனடாவை வீழ்த்தியது.

ஆர்ஜன்டீனா அணி சார்பில் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி மற்றும் ஜுலியன் அல்வாரிஸ் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

உலக கால்பந்தாட்ட தர வரிசையில் 46 ஆம் இடத்தை வகிக்கும் கனடிய அணி, உலக சாம்பியன்களான ஆர்ஜன்டீன அணியுடன் பலப்பரீட்சை நடத்தியிருந்தது.

## நேட்டோ இலக்கை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை பாதுகாப்புக்காகச் செலவழிக்கும் முடிவை கனடா வியாழக்கிழமை அறிவிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல மாதங்கள் இந்த விடயத்தில் அழுத்தத்தை எதிர்கொண்ட பின்னர் ஜஸ்டின் ட்ரூடோவின் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக சிரேஷ்ட அரசாங்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதம் என்ற இலக்கை அடைய பொது காலக்கெடு இல்லாத நாடாக கனடா மட்டும் நேட்டோவில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2030 ஆம் ஆண்டுக்குள், கனடா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.76 சதவீதத்தை இராணுவத்திற்காக செலவிடும் என தேசிய பாதுகாப்புத் துறை ஏற்கனவே அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஏழு வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

Rentals.ca மற்றும் Urbanation ஆகிய நிறுவனங்களினால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு எனினும் கடந்த மே மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது வாடகை தொகையானது 0.8 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு படுக்கையறையை கொண்ட வீடு ஒன்றின் சராசரி மாதாந்த வாடகை 1918 டாலர்கள் எனவும் இரண்டு படுக்கை அறைகளை கொண்ட வீடு ஒன்றின் சராசரி வாடகை தொகை 2301 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குழந்தை உட்பட...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை விமானம் மூலம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் டிரெக்டர் டிரெய்லர் சாரதிக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸ் அதிகாரிகள் விசாரணையை முன்னெடுக்கின்றனர்.



# பாதுகாப்புக்குச் செலவிடப் பின்னடிக்கும் கனடாவின் போக்குக் குறித்து விமர்சனம்

**ஒன்ராரியோ, ஜூலை 11**

கனடாவின் பாதுகாப்புச் செலவீனங்களை அமெரிக்க கடுமையாக விமர்சித்துள்ளது.

அமெரிக்காவின், வொஷிங்டன் நனகரில் நடைபெறும், நேட்டோ உச்சி மாநாட்டில் இந்த விமர்சனம் வெளியாகியுள்ளது.

இந்த உச்சி மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்றுள்ளார்.

கனடாவின் பாதுகாப்புச் செலவு வெட்கக்கேடானது என அமெரிக்க சபாநாயகர் மைக் ஜோன்சன் விமர்சித்துள்ளார்.

32 நேட்டோ உறுப்பினர்களில், 23 நாடுகள் தமது மொத்தச் செலவினத்தில் இரண்டு சதவீததை பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கீடு செய்யும் எதிர்பார்ப்பை எட்டியுள்ளன.

கனடா தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.37 சதவீதத்தைப் பாதுகாப்புக்காக செலவிடுகிறது.

இது 32 நாடுகள் பட்டியலின் கனடாவை 27 ஆவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

இராணுவ உறுப்பினர்களை ஆள்சேர்ப்பு செய்து, அதிக ஆயுதங்கள், உபகரணங்களை உற்பத்தி செய்வதன் மூலம் இராணுவ தயார் நிலையை அதிகரிக்க கனடா மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.





# மெய்வன்மை வீரரை நாடு கடத்தும் நடவடிக்கை ஓராண்டுக்கு நிறுத்தும்

**ஒன்ராரியோ, ஜூலை 11**

கனடாவிலிருந்து நாடு கடத்தப்படவிருந்த மெய்வன்மை வீரர் ஒருவர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஓராண்டு காலம் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஜமெய்க்காவைச் சேர்ந்த தமாரி லிண்டோ மற்றும் அவரது குடும்பத்தினரே இவ்வாறு நாடு கடத்தப்படவிருந்தனர்.

தாமரி யோர்க் பல்கலைக்கழக மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. தமாரி மிகச் சிறந்த தடைதாண்டி ஓட்டவீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் மொன்றியலில் நடைபெற்ற கனடிய தடகளப் போட்டியில் 110 மீற்றர் தடை தாண்டி ஓட்டப் போட்டியில் தமாரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அகதிக் கோரிக்கை விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் அவர்கள் நாடு கடத்தப்படவிருந்தனர்.

பியர்சன் விமான நிலையத்திலிருந்து தமாரி மற்றும் குடும்பத்தினர் நாடு கடத்தப்படவிருந்தனர்.

எனினும் இறுதி நேரத்தில் ஓராண்டு காலம் தற்காலிக அடிப்படையில் கனடாவில் வதிவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தாமரி மற்றும் குடும்பத்தினரை நாடு கடத்தும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மகஜர் ஒன்றை அரசாங்கத்திடம் வழங்கியிருந்தனர்.

அனைத்து தரப்பினரும் தமக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுவதாக தமாரி தெரிவித்துள்ளார்.



# சுகாதாரப் பாதுகாப்பில் செயற்கை நுண்ணறிவு; 15 மில்லியன் டொலர் முதலிட கனடா தீர்மானம்

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுலை 11**

சுகாதாரப் பாதுகாப்பில் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்காக கனடா சுமார் 15 மில்லியன் டொலர் முதலீடு செய்யவுள்ளது.

மத்திய அரசின் புத்தாக்க அமைச்சர் பிரான்சுவா-பிலிப் ஷிம்பெயின், நோயாளிகளுக்கு சேவை செய்யும் தொழிலின் திறனை மேம்படுத்தும் இந்த நிகழ்ச்சியை 'கேம் சேஞ்சர்' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

வான்கூவர் அடிப்படையிலான தொழில்நுட்ப கிளஸ்டர் திட்டத்தின் மூலம் ஐந்து மருத்துவ தொழில்நுட்ப நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும் எனவும், மேலும் கவனிப்பை மேம்படுத்த சில பணிகளை தானியங்குபடுத்தும் தொழிநுட்பத்தை உருவாக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

'ஹெல்த் காம்பஸ் ஐஐ'திட்டம் என அழைக்கப்படும் செயற்கை நுண்ணறிவு முன்முயற்சியானது, 15.3 மில்லியன் டொலர்கள் மத்திய அரசாங்க முதலீட்டை பங்குதாரர்களிடமிருந்து கூடுதல் முதலீடுகளைப் பெறுவதற்கான அந்நியச் செலாவணியாகப் பயன்படுத்தி மொத்த பட்ஜெட்டை 44 மில்லியன் டொலர்களாக ஆதரிக்கவுள்ளது.

# வீடு கொள்வனவு செய்வதாகக் கூறிய வாக்குறுதியை மீறிய தரப்பினருக்குக் கனடாவில் அபராதம் விதிப்பு

வீடு ஒன்றை கொள்வனவு செய்வதாக உறுதிமொழி வழங்கி அந்த வீட்டினை கொள்வனவு செய்யாத நபர்களுக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

வீட்டுமனை விற்பனை குறித்த இணையதளங்களில் பட்டியலிடப்பட்டிருந்த வீடு ஒன்றைக் கொள்வனவு செய்வதாக சிலர் வீட்டு உரிமையாளரிடம் உறுதிமொழி வழங்கியிருந்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாயாவில் அமைந்துள்ள வீடு ஒன்றை சுமார் 11 மில்லியன் டாலர்களுக்கு கொள்வனவு செய்வதாக உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. எனினும் உறுதிமொழி அளிக்கப்பட்டதன் பிரகாரம் குறிப்பிட்ட காலத்தில் இந்த வீடு கொள்வனவு செய்யப்படவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரும் கொள்வனவாளர்களும் உச்ச நீதிமன்றில் பரஸ்பர வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.




வீடு கொள்வனவு செய்வதாக உறுதியளிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குறித்த நபர்கள் வீட்டை கொள்வனவு செய்யவில்லை.

இந்தக் காலப் பகுதியில் சந்தையில் வீட்டின் பெறுமதி வீழ்ச்சி அடைந்திருந்தது.

இதன் காரணமாக அந்த நபர் வேறு ஒருவருக்கு குறைந்த தொகைக்கு இந்த வீட்டை விற்பனை செய்ய நேரிட்டுள்ளது.

இவ்வாறு குறைந்த தொகைக்கு வீட்டை விற்பனை செய்த காரணத்தினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்யுமாறு முன்னதாக வீடு கொள்வனவு செய்வதாக உறுதியளித்த நபர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி சுமார் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் டொலர்கள் வரையில் நட்ட ஈடாக செலுத்தப்பட வேண்டும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.



# வின்னிபெக்கில் நான்கு பழங்குடியினப் பெண்கள் கொலை குறித்து சுயாதீன விசாரணை அவசியம்!

## பழங்குடியினரின் வருடாந்த பொது அமர்வில் வற்புறுத்து

**கியூபெக், ஜூலை 11**

வின்னிபெக்கில் பழங்குடியினப் பெண்கள் நால்வர் கொல்லப்பட்டமை தொடர்பில் சுயாதீன விசாரண நடத்தப்படல் வேண்டும் என பழங்குடிகள் சபை கோரியுள்ளது.

மொன்ரியலில் நடைபெற்று வரும் பழங்குடியினரின் வருடாந்த பொது அமர்வில், வோர் லேக் பழங்குடியினத் தலைவர் பெட்ஷி கென்னடியினால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையில், மனிடோபாவின் லெப்டினன்ட்-கவர்னரிடம், இந்த காணாமல் போதல் விடயம் தொடர்பில் பொலிஸ் மற்றும் மாகாணத்தின் எதிர்வினையை விசாரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக ஏனைய பழங்குடியினத் தலைவர்களும் வாக்களித்துள்ளனர்.

மனநோயாளி என்று அவரது சட்டத்தரணிகளினால் வாதிடப்படும் ஜெரமி சிக்கிமிக்கி என்பவர் 2022 காலத்தில் இந்தப் பழங்குடியினப் பெண்கள் நால்வரையும் தாமே கொலை செய்தார் என ஒப்புக் கொண்டிருந்தார். அந்த வழக்கின் மீது இன்று தீர்ப்பு வழங்கப்படவிருக்கின்றது.




# நோர்த் யோர்க்கில் சூடு
# ஒருவருக்குப் படுகாயம்

**ஒன்ராரியோ, ஜூலை 11**

நோர்த் யோர்க்கில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் டொரன்டோ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


ஸ்டீல்ஸ் எவனியு வெஸ்ட் மற்றும் சிகனெட் டிரைவப் பகுதிகளுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் உடனடியாக சம்பவ இடத்தில் இருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.







# பதின்ம வயதுப் பெண் பிள்ளைகளை ஏமாற்றிய பூர்வக்குடியினப் பெண் உட்பட ஏழு பேர் கைது

அழகிய இளம்பெண் ஒருவர் தன்னை விட வயதில் மூத்த ஆண்களுடன் சந்தேகத்துக்குரிய வகையில் சுற்றித் திரிவதாக கனேடிய பொலிஸாருக்கு ஒரு தகவல் கிடைத்துள்ளது.

விசாரணையைத்துவக்கியபொலிஸாருக்குக் கடும் அதிர்ச்சி காத்திருந்தது!

கனடாவின் மனித்தோபா மாகாணத்தில் உள்ள Portage la Prairie என்னும் நகரில், 15 வயதுள்ள பெண்ணொருத்தி தன்னைவிட வயதில் மூத்த ஆண்களுடன் சுற்றித் திரிகிறார் எனக் கனேடிய பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, அவளை பொலிஸார் தேடிச்செல்ல, அவளுடன் மற்றொரு 15 வயதுப் பெண்ணும் சிக்கினாள்.

நடந்தது என்னவென்றால், இந்த பதின்மவயதுப் பிள்ளைகளுக்கு போதைப்பொருள் தருவதாக ஆசை காட்டிய பூர்வக்குடியின பெண்ணொருவர், அவர்களை ஆண்களிடம் அழைத்துச் சென்றுள்ளார். அவர்கள் அந்தச் சின்னஞ்சிறு பெண்களை உடல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொண்டு, அதற்குப் பதிலாக அவர்களுக்குப் போதைப்பொருள்களைக் கொடுத்துள்ளார்கள்.

நல்ல தோழி போலப் பேசி தங்களை அந்தப் பெண் ஏமாற்றுவதை அறிந்து தப்பிச் செல்ல முயன்றபோது, அவர்களை அந்த ஆண்கள் இருக்கும் அறைக்குள் தள்ளி வெளியே கதவைப் பூட்டியிருக்கிறார் அந்த பூர்வக்குடியினப் பெண்.


இந்த அதிரவைக்கும் உண்மை தெரியவந்ததையடுத்து அந்த பதின்ம வயதுப் பிள்ளைகளை பொலிஸார் மீட்டுள்ளனர். அவர்களைப்போலவே, சுமார் 13 அல்லது 14 வயதுள்ள ஒரு பிள்ளையும் சீரழிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. ஆனால், அவள் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த துஷ்பிரயோகம் குறித்து தெரியவந்ததைத் தொடர்ந்து, Chasity Nicole Assiniboine (43) என்னும் அந்த பூர்வக்குடியின பெண், Sean Michael Boak (40), David Guy Howard Taylor (40), Alexander Paul Lidster (39), Wesley Clayton Roulette (44), மற்றும் Frank Peter Justin Tecza (39) என்னும் ஐந்து ஆண்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

மேலும், Scott Joseph Taylor (34) என்னும் நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது 18 வயதுக்குக் குறைந்த பிள்ளையை சீரழித்தார் எனவும், ஆயுதங்கள் வைத்திருந்ததார் எனவும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒருவருக்கொருவர் அறிமுகமான அந்த ஏழு பேர் மீதும், 65 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள பொலிஸார், இந்தக் குற்றச் செயலில் மேலும் யாருக்காவது தொடர்புள்ளதா, வேறு யாரவது பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பதை அறிய தீவிர விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்.

# லிபரல் எம்.பி. மெக்லியோட் அடுத்த முறை போட்டியிடார்



**ஒன்ராரியோ, ஜூலை 11**

வடமேல் பிராந்தியத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் மைக்கல் மெக்லியோட் அடுத்த முறை தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டில் வடமேல் பிராந்தியங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் நாடாளுமன்ற உறபப்பினராக அவர் இருந்தார்.

எனினும், அடுத்த தேர்தல் வரை தாம் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது பேரப்பிள்ளைகளுடன் அதிக நேரத்தை செலவிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.